


**18.9.2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான 3-வது ஆட்சியின் 100 நாட்களில் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை மத்திய அரசு தொடங்கியுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

2. குறைவான கார்பன் வெளியேற்ற தொழில் நுட்பங்களை கண்டறிந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வலுப்படுத்தப்பட வேண்டுமென்று மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

3. ஜம்மு காஷ்மீரின் 7 மாவட்டங்களின் 24 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இன்று நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவில் பகல் 1 மணி நிலவரப்படி 41.17 சதவிகித வாக்குகள் பதிவாயின.

4. விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க உள்ளடக்கிய பயிற்சிகள் மற்றும் விளையாட்டு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

5. சீன ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Malvika Bansod -** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>எல்.முருகன்</u>

மத்தியில் நரேந்திரமோடி அரசின் 3-வது ஆட்சி அமைந்து 100 நாட்கள் முடிவடைந்த நிலையில், 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை மத்திய அரசு தொடங்கியுள்ளது

விவசாயிகள், மகளிர், இளைஞர்கள், நடுத்தர வகுப்பினர் ஆகியோரின் நல மேம்பாட்டிற்காக இந்த திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளன.

மேலும் சாலை உள்ளிட்ட பல்வேறு இணைப்புகள் மேம்படுத்தப்படுவதோடு, நாடுமுழுவதும் கட்டமைப்பு துறை பெரும் வளர்ச்சி கண்டு வருகிறது.

இந்நிலையில் இந்த 100 நாட்கள் பயணத்தில அரசு வளர்ச்சியடைந்த பாரதததத்திற்கான இலக்கை நோக்கி முனைப்புடன் செயலாற்றி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்

தமிழ்நாட்டில் செமி கண்டக்டர் எனப்படும் மின்குறைக்கடத்தி இயக்கம் முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக குறிப்பிட்டார்.

வந்தே பாரத் ரயில் உட்பட 20 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்கள் தமிழகத்திற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்நிலையில் பிரதமர் திரு.நரேந்திரமோடி மூன்று நாள் அரசு முறை பயணமாக வரும் 21-ம் தேதி அமெரிக்கா செல்கிறார்.

வில்மிங்டனில் 21-ம் தேதி நடைபெறும் குவாட் தலைவர்கள் உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்கிறார்.

நியூயார்க்கில் இந்திய வம்சாவளியினரிடையே வரும் 22-ம் தேதி உரையாற்றும் பிரதமர், 23-ம் தேதி ஐ.நா.சபையின் எதிர்கால உச்சிமாநாட்டில் சிறப்புரையாற்றுகிறார்.

❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள மாளவியா தேசிய தொழில்நுட்ப கல்விக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் ஆயிரத்து 361 மாணாக்கர் பட்டங்களை பெறவுள்ளனர்.

மத்திய பிரதேச மாநிலம் இந்தோர் மற்றும் உஜ்ஜைனில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் குடியரசு தலைவர் கலந்து கொள்கிறார்.

வரும் வெள்ளிக்கிழமை ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள தேசிய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களிலும் குடியரசு தலைவர் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖

பூபேந்தர் யாதவ்

நிலையான சமூகத்தை உருவாக்க நீடித்த வளர்ச்சிப் பாதையில் நாம் பயணிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நிலையான பொருளாதார வளர்ச்சியை எட்ட கரியமிலவாயு வெளியேற்றம் குறைக்கப்பட வேண்டுமென்று கூறினார்.

காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ள மத்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துரைத்த அமைச்சர், இதுதொடர்பான பாரீஸ் ஒப்பந்த இலக்குகளை எட்டிய ஜி-20 நாடுகளில் ஒரே நாடு இந்தியா மட்டுமே என்று குறிப்பிட்டார்.

குறைவான கார்பன் வெளியேற்ற தொழில்நுட்பங்களை கண்டறிந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை வலுப்படுத்தி, புதைப்படிமங்களை குறைத்து பசுமை போக்குவரத்தை மேம்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினர் பயனடைவார்கள் என்றார்.

கார்பன் இல்லாத நிலையை எட்டுவதற்கான இலக்கை இந்தியா நிர்ணயித்திருப்பதை சுட்டிக்காட்டிய அவர், அடுத்த 10 ஆண்டுகளுக்கான தொலைநோக்கு திட்டத்துடன் அரசு முன்னேற்றப்பாதையில் செல்வதாகவும் எடுத்துரைத்தார்.

கரியமில வாயு வெளியேற்றம் இல்லா நிலை உருவாக்கம் என்ற தலைப்பில் இம்மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

அன்னையின் பெயரில் மரம்

நாடுமுழுவதும் அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் சார்பில் இதுவரை ஏழாயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளின் அமைச்சகத்தின் கீழுள்ள பல்வேறு அலுவலகங்கள் சார்பில் இந்த மரம் நடும் இயக்கம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி உலக சுற்றுச்சூழல் தினத்தன்று இந்த இயக்கத்தை தொடங்கிவைத்த நிலையில், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் சென்ற மாதம் 2-வது வாரத்தில் இந்த இயக்கத்தை தொடங்கியது.

புவியை பாதுகாத்து பூமிதாயை பராமரிப்பதன் ஒருபகுதியாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தூய்மையே சேவை இருவார இயக்கம் நாடுமுழுவதும் நேற்று தொடங்கியுள்ள நிலையில் வரும் ஒன்றாம் தேதிவரை அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ் ஏராளமான மரக்கன்றுகளை நடும் நடவடிக்கைகளை அமைச்சகம் முனைப்புடன் மேற்கொண்டுள்ளது.

இதனிடையே சேலத்தில் இளையோர் மரக்கன்றுகளை நடும் வகையில் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் திரு. ஜெகந்நாதன் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

ஹர்தீப்சிங் பூரி

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள 55 மில்லியன் டன் மூங்கில்கள் நாட்டின் ஒட்டுமொத்த வள ஆதாரங்களில்
66 சதவிகித அளவை பூர்த்தி செய்வதாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தொடங்கிவைத்த தேசிய மூங்கில் இயக்கத்தை சுட்டிக்காட்டிய அமைச்சர், இந்த திட்டம் பண்ணை வருவாயை ஊக்குவிப்பதோடு காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ள உதவுவதாக கூறினார்.

இதன்மூலம் உயிரி எத்தனால் உற்பத்தி அதிகரிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அசாமிலுள்ள நாட்டின் முதலாவது 2-ஜி எத்தனால் உயிரி சுத்திகரிப்பு மையம், மூங்கிலை எத்தனாலாக மாற்றுவதன் மூலம் உள்ளூர் விவசாயிகள் பயனடைவதாக எடுத்துரைத்தார்.

இதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறுவதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

ஜம்மு காஷ்மீர்

ஜம்மு காஷ்மீரில், 7 மாவட்டங்களின் 24 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இன்று நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவில் 1 மணி நிலவரப்படி 41.17 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருகிறது.

முதல்முறை வாக்காளர்கள், இளையோர்கள் உட்பட, ஏராளமானோர் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர்.

மூத்த குடிமக்களும், மாற்றுத்திறனாளிகளும் வாக்களிக்க வசதியாக வாக்குச்சாவடிகளில் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

3 ஆயிரத்து 276 வாக்குச்சாவடி மையங்களில், 23 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள், 219 வேட்பாளர்களின் வெற்றியை இன்று நிர்ணயிக்கின்றனர்.

வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெறும்.

2-ம் கட்ட வாக்குப்பதிவு வரும் 25-ம் தேதியும்

3-ம் கட்ட வாக்குப்பதிவு அடுத்தமாதம் ஒன்றாம் தேதியும் நடைபெறும்.

வாக்குகள் அடுத்தமாதம் 8-ம் தேதி எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சிகளை வழங்குவதோடு, விளையாட்டு கட்டமைப்புகளை மேம்படுத்த அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை சார்பிலான மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், விளையாட்டு வீரர்களின் பின்புலத்தை கருதாமால் தரத்தை மட்டுமே கண்ணோக்கி முழுமையான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் நாடு வெற்றியை எட்டும் என்று கூறினார்.

மாற்றுத்திறன் படைத்த தடகள வீரர்களுக்கு ஊக்கமருந்து தடுப்பு திட்டத்துடன் கூடிய கல்வி முறையை அளிக்க தேசிய ஊக்கமருந்து தடுப்பு நிறுவனம உயர் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்காக இந்த அமைப்பு, கல்வி அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தில் கையெழுத்திட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

மாற்றுத்திறன் படைத்த தடகள வீரர்களுக்கான பல்வேறு அரசின் திட்டங்களையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

தேசிய ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் சிறார்களுக்கான **N.P.S.** வாத்சல்யா திட்டத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் காணொலி வாயிலாக புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

சென்னை, திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்கள் உட்பட நாட்டின் 75 இடங்களில் இத்திட்டம் இன்று தொடங்கிவைக்கப் படுகிறது.

திருச்சி துறையூர் எரகுடி பகுதியில் உள்ள **AGM** மேல்நிலைப்பள்ளியிலும்,

நெல்லை களக்காட்டில் உள்ள தூய வளனார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும் இந்த திட்டம் இன்று தொடங்கப்படுகிறது.

பெற்றோர்கள் தத்தம் குழந்தைகளுக்கான சேமிப்பபை உறுதிசெய்ய இந்த திட்டம் வகைசெய்வதாக இதன் திருச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. முருகேசன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் கிடேரி கன்றுகளுக்கு வீச்சுநோய் தடுப்பூசி முகாம் இன்று தொடங்கி அடுத்தமாதம் 15-ம் தேதிவரை நடைபெறுகிறது.

கால்நடை வளப்போர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் டாக்டர்.உமா அறிவுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

தூத்துக்குடி முத்துநகர் கடற்கரை, துறைமுக கடற்கரை ஆகியவை துறைமுக நிதியின் மூலம் 8 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று மாநகராட்சி மேயர் திரு. ஜெகன் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டல பொதுமக்கள் குறைதீர் சிறப்பு முகாமில் இன்று பேசியஅவர், மக்களிடமிருந்து பெறப்பட்ட 173 மனுக்களில் 4 நீங்கலாக அனைத்திற்கும் தீர்வு காணப்பட்டுள்ளதாக கூறினார்.

தூத்துக்குடி வ.உ.சி. சாலை மேம்படுத்தும் பணிகள் நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

மீனவர்கள்

இலங்கை கடற்படையினரால் சென்றமாதம் 5-ம் தேதி சிறைபிடிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளத்தை சேர்ந்த 10 மீனவர்களுக்கு, மூன்றரை கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள புத்தளம் நீதிமன்றத்தில் இம்மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தபோது நீதிபதி இந்த அபராதத் தொகையை விதித்ததையடுத்து நீதிமன்றம் முன்பு 7 மீனவர்களும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தீர்ப்பு தருவைக்குளம் மீனவ மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖

ஆர்.என். ரவி

நாகை தமிழ்நாடு டாக்டர் ஜெயலலிதா மீன்வள பல்கலைகழகத்தின் 9-வது பட்டமளிப்புவிழாவில் பல்கலைக்கழக வேந்தரும், தமிழக ஆளுநருமான திரு. ஆர்.என். ரவி மாணாக்கருக்கு பட்டங்களை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

சீன ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Malvika Bansod -** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற போட்டியில் அவர் இந்தோனேசியாவின் **Tunjung-**ஐ 26-24, 21-19 என்ற செட்களில் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டத்தில் கிரன் ஜார்ஜ் - ஜப்பானின் **Kenta Nishimoto-**வை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖